**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR**

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.41/2026 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw-1 |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name : **கெங்காதரன்**

Father's Name :

Village :

Taluk :

Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

14.07.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்பொழுது கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மாமா ஆவார். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னர் காலை சுமார் 07.00 மணிக்கு எனது ஊரில் உள்ள பெருமாள்கோவில் அருகே வைத்து அடையாளம் தெரியாத நபர்கள் கூட்டமாக நின்றுகொண்டிருந்தார்கள். அப்போதுஅந்த கூட்டத்தில் சிறிது வாக்குவாதம் நடைபெற்றது. நாங்கள் எங்களுக்குள்ளேயே பேசி தீர்த்துக்கொண்டோம். சம்பவத்தின்போது எனக்கு காதில் காயம் ஏற்பட்டது. எனது காதில் தாக்கிய நபர் யார் என்று எனக்கு தெரியாது. காயம்பட்ட நான் மதுரையில் உள்ள மீனாட்சிமிஷன் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன்.

நான் சிகிச்சையில் இருந்தபோது நடந்த சம்பவத்திற்கு புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில்

என்ன எழுதியிருந்தென்பது குறித்து எனக்கு நினைவில்லை. புகார் மனுவில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பு கு.வி**

கடந்த 23.04.2026ம் தேதி காலை 07.00மணிக்கு எனது ஊரில் உள்ள பெருமாள்கோவிலின் பின்புறம் வைத்து இவ்வழக்கின் எதிரி என்னை தகாதவார்த்தைகளால் பேசி, தாக்கி கொலைமிரட்டல் விடுத்தாரா என்றால் இல்லை. ஆஜர் எதிரி எனது மாமா என்ற காரணத்தினால் அவருடன் சமாதானமாக சென்றுவிட்டு அவரை காப்பாற்றுவதற்காக தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வாய்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.